## நாளை திரூரில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

First Published : 05 Jul 2010 01:06:57 AM IST

திருவள்ளூர், ஜூலை 4: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு அசோலா உயிர் உரம் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் செவ்வாய் மற்றும் புதன்கிழமை
(ஜூலை 6, 7) நடைபெற உள்ளது.
÷இதுகுறித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்:
÷நெல் சாகுபடியில் உயிர் உரமான அசோலாவின் பங்கு மகத்தானது. இதை இடுவதன் மூலம் உரச் செலவு கணிசமாக குறைவதோடு களைகளும் கட்டுப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் அசோலா உயிர் உர உற்பத்தி மற்றும் நெற்பயிரில் அதன் பயன்பாடு பற்றிய பயிற்சி முகாம் செவ்வாப்பேட்டை அடுத்துள்ள திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் செவ்வாய், புதன் (ஜூலை 6, 7) ஆகிய இரண்டு தினங்களில் நடைபெறவுள்ளது.
÷ஆகையால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தவறாது பயிற்சி முகாமில் பங்கேற்று அசோலா உயிர் உரம் பற்றிய விரிவான தகவல்களை அறிந்து பயனடையலாம். மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் 27620705 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

## கரும்பு விவசாயிகளுக்கு டீசல் மானியம்

First Published : 04 Jul 2010 09:53:43 AM IST

நாமக்கல், ஜூலை 3: விலை உயர்வு எதிரொலியாக கரும்பு விவசாயிகளுக்கு டீசல் மானியம் வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க 27-வது ஆண்டு பேரவைக் கூட்டம் நடந்தது.சங்கத் தலைவர் எஸ்.பி. கந்தசாமி தலைமை

வகித்தார். பொதுச் செயலர் கே. நடராஜன் ஆண்டறிக்கை வாசித்தார். சங்க நிர்வாகிகள் எட்டிக்கண், தங்கவேல், முருகேசன், கனகராஜ் உள்ளிட்ட பலர் பேசினர்.

பின்னர், நிறைவேற்றப்பட்ட தீ௦ர்மானங்கள்:

கரும்பு விவசாயிகளுக்கு முதலீட்டு செலவு அதிகரித்து வருவதால் கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 2,500 ஆக வழங்க வேண்டும். கரும்புக்கான வெட்டிக் கூலி, வாகன வாடகை செலவு ஆகியவற்றை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும்.

மின் இணைப்பு காலதாமதமின்றி விரைந்து வழங்க வேண்டும். ஆலை நிர்வாகத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க தமிழக அரசு சார்பில் சிறப்பு குழு அமைக்க வேண்டும். முறைகேடுகள் உறுதி செய்யப்பட்டால் ஆலைக்கு ஏற்பட்டுள்ள இழப்பை தொடர்புடைய நபர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக எஸ்.பி. கந்தசாமி, செயலராக கே. நடேசன், பொருளாளராக வரதாஜன் உள்ளிட்ட 21 நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**விதைச் சான்று குறித்து பயிற்சி**

First Published : 04 Jul 2010 09:52:31 AM IST

பரமத்தி வேலூர், ஜூலை 3: பரமத்தியில் அரசு விதை அலுவலர்களுக்கு விதைச் சான்று குறித்த நடைமுறை பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பரமத்தி வேளாண்மை உதவி இயக்குனர் க.வீரப்பன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு பரமத்தி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக கூட்ட அரங்கில் விதை சான்று நடைமுறை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. நாமக்கல் வேளாண்மை இணை இயக்குனர் பிரபாகரன் தலைமை வகித்தார்.

வேளாண்மை துணை இயக்குனர் சுப்பிரமணியம்,விதைச் சான்று உதவி இயக்குனர் கிருஷ்ணராஜ்,விதைச் சான்று அலுவலர்கள் சுரேஷ்குமார்,கந்தசாமி ஆகியோர் அரசு விதை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

**மேட்டூர் அணைநீர்மட்டம் 80.06 அடி**

First Published : 04 Jul 2010 09:53:02 AM IST

சேலம், ஜூலை 3: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.06 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 534 கன அடி வீதம் தண்ணீர் வந்து

கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,008 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 42.01 டி.எம்.சி.

**தொடர் மழை எதிரொலி: தென்னை நார் உற்பத்தி பாதிப்பு**

First Published : 04 Jul 2010 09:14:49 AM IST

பொள்ளாச்சி, ஜூலை 3: பொள்ளாச்சி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் தென்னை நார் உற்பத்தி கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

தென்னை நகரான பொள்ளாச்சி பகுதியில் சுமார் 500 தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலைகள் உள்ளன. ஒவ்வோர் தொழிற்சாலையிலும் சராசரியாகத் தினமும் சுமார் 3 டன் தென்னை நார் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் தென்னை நாரில் பெரும் பகுதி கேரளத்துக்கு அனுப்பப்பட்டது. இப்போது சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பொள்ளாச்சி பகுதியில் பொதுவாக ஜூன் மாதம் முதல் தென்மேற்குப் பருவ மழை துவங்கும். இந்த ஆண்டு ஜூலையில்தான் பருவ மழை துவங்கியுள்ளது. கடந்த 3 நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தென்னை நார் உற்பத்தியாளர்கள் மிகுந்த வருத்தத்தில் உள்ளனர்.

தென்னை மட்டையில் இருந்து நாரைப் பிரித்தவுடன் அதை வெயிலில் உலர வைக்க வேண்டும். அப்போதுதான் நாரில் இருந்து ஈரப்பதம் குறையும். உலர வைக்கப்பட்ட தென்னை நாரில் உறுதி இருக்கும். ஈரப்பதத்துடன் ஏற்றுமதி செய்யும்போது தென்னை நாரில் பூஞ்சான் பிடிக்க வாய்ப்புள்ளது.

கடந்த சில நாள்களாக பொள்ளாச்சி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் தென்னை நாரை உலர வைக்க முடியவில்லை. இதனால் பெரும்பாலான தொழிற்சாலைகளில் உற்பத்தி கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

மின்சாரத்தைப் பயன்படுத்தி நாரை உலர வைக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று, கயிறு வாரியத்திடம் தென்னை நார் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தரமான விதை விற்பனை செய்யுமாறு இயக்குநர் அறிவுறுத்தல்**

First Published : 04 Jul 2010 09:13:44 AM IST

கோவை, ஜூலை 3: விவசாயிகளுக்கு தரமான விதைகளை விற்பனை செய்யுமாறு, விதை விற்பனையாளர்களுக்கு விதைச்சான்று இயக்குநர் வை.கந்தசாமி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து விதை விற்பனையாளர்களுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம்:
விவசாயத்திற்கான பெரும்பாலான இடுபொருட்கள் தனியார் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. விவசாயத்திற்கு தேவையான இடுபொருட்கள் தனியார் விற்பனையாளர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு, அதனை விவசாயிகள் பெற்று பயன்பெறுவதில் விதை விற்பனையாளர்களின் பங்கு அதிக அளவில் உள்ளது.
புதிதாக விதை வியாபாரம் செய்ய விரும்புவோர் தங்களது மாவட்டத்தில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குநரை தொடர்புகொண்டு விதை விற்பனை உரிமம் பெறவேண்டும்.
விதை விற்பனை நிலையத்தில் தங்களது உரிமத்தை பார்வையில்
படும்படி வைக்க வேண்டும். தங்களிடம் விற்பனைக்கு உள்ள விதைகளின் விபரங்களைப் பலகையில் எழுதி வைக்கவேண்டும். அதில், பயிர், ரகம், இருப்பு அளவு மற்றும் விலை விபரம் இருக்க வேண்டும்.
தங்களிடம் உள்ள விதைக் குவியல்களில் இருந்து பணிவிதை மாதிரிகள் எடுத்து அனுப்பி விதைப் பரிசோதனை செய்து, தரத்தை உறுதி செய்த பின்னர் விவசாயிகளுக்கு விற்பனை செய்வது நல்லது. புதிதாக விற்பனைக்கு வரும் விதைகள் பற்றிய விபரங்களை அவசியம் வைத்திருக்க வேண்டும்.
திறந்த பைகளில் உள்ள விதைகளை விற்பனை செய்யக் கூடாது. காலாவதியான விதைக் குவியல்களை தனியாக வைக்கவும். விதைக் குவியல்கள் வாங்கிய மற்றும் விற்பனை செய்த விபரங்களை 3 ஆண்டுகளுக்குப் பராமரிக்க வேண்டும். விதை விற்பனையாளர்கள் இவ்வழிமுறைகளைக் கடைப்பிடித்து விவசாயிகளுக்குத் தரமான விதைகள் விற்பனை செய்ய வேண்டும்.

தினமலர்

**கரும்பு பயிரில் தீ: ரூ.2 லட்சம் நாசம்**

ப.வேலூர்: இரண்டு ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்த கரும்பு தோட்டத்தில் மர்ம நபர்கள் தீ வைத்ததால், 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கரும்பு பயிர் முற்றிலும் எரிந்து சாம்பலானது.

ப.வேலூரை சேர்ந்த மணி (40) கவுண்டம்பாளையத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்துள்ளார். அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த கரும்பு தோட்டத்திற்கு நேற்று மாலை 4 மணிக்கு மர்ம நபர்கள் தீ வைத்தனர். தீ மளமளவென பரவி கொளுந்துவிட்டு எரிய துவங்கியது. அருகில் இருந்தவர்கள் மணிக்கு தகவல் தெரிவித்தனர்.

கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் மற்றும் நாமக்கல் தீயணைப்பு நிலையத்தில் இருந்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு இரண்டு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இரண்டு ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு முழுவதும் எரிந்து சாம்பலானது. அதன் மதிப்பு 2 லட்சம் ரூபாய். சம்பவம் குறித்து ப.வேலூர் போலீஸார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

**பாசன கால்வாய் பகுதியில் ஆக்கிரமிப்பு விவசாயப் பணிகள் பாதிக்கும் அபாயம்**



உத்தரகோசமங்கை : உத்தரகோசமங்கை அருகே கணபதியேந்தல் கண்மாய் பாசன கால்வாய் பகுதியை தனியார் ஆக்கிரமித்துள்ளதால், நடப்பாண்டில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு ஏழை விவசாயிகள் பாதிக்கும் நிலை உருவாகி உள்ளது. பல தலைமுறையாக வயிற்று பசியை போக்கிய , வாழ்வாதாரத்தை உயர்த்திய விளை நிலங்களை பெரும்பாலான விவசாயிகள் வீட்டடி நிலங்களுக்கு விற்பனை செய்து மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். நல்ல விலை கொடுத்து விளை நிலங்களை வாங்கிய ரியல் எஸ்டேட்காரர்கள் , மற்ற விவசாய நிலங்களுக்கு செல்லும் பாசன கால்வாய் பகுதியை ஆக்கிரமித்து உள்ளதால் விவசாயப்பணிகள் பாதிக்கும் அபாயம் உள்ளது. திருப்புல்லாணி ஒன்றியம் பனைக்குளம் ஊராட்சி கணபதியேந்தல் கண்மாய் பகுதியில் ஏராளமானோர் விவசாயப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.மழை காலத்தில் வைகை ஆற்றில் வரும் நீர் எட்டிவயல் கண்மாய்க்குள் செல்கிறது.அங்கு நிரம்பியதும் இதன் உபரி நீர் கணபதியேந்தல் கண்மாய் வந்தடைகிறது.இந்த கண்மாய் நீரை நம்பியே அப் பகுதி விவசாயிகள் உள்ளனர்.தற்போது இந்த கண்மாயிலிருந்து விவசாய நிலங்களுக்கு சென்ற பாசனக்கால்வாய் ,200 அடி நீளத்திற்கு கம்பி வலை போட்டு அடைக்கப்பட்டுள்ளது. இதனால், எதிர்காலத்தில் கால்வாய் முற்றிலும் அடைக்கப்பட்டு ,விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும் அபாயம் உள்ளதாக அப்பகுதி விவசாயிகள் அஞ்சுகின்றனர். இதோ பாதிக்கப் பட்ட விவசாயிகளின் குமுறல்கள் : வேலு (86) : பல தலைமுறையாக விவசாயம் செய்து வருகிறோம்.கடந்த ஆண்டுகளில் எந்த பிரச்னையும் வரவில்லை.தற்போது விவசாய நிலங்களை

எல்லாம் வீட்டடி நிலமாக மாற்றி வருவதால், நாங்கள் விவசாய பணி மேற்கொள்வது சிரமமாக தெரிகிறது. நிலத்தை வாங்குவோர் கால்வாயை அடைக்க முயற்சி மேற்கொள்கின்றனர்.சித்ரா (கணபதி மகளிர் குழு பொறுப்பாளர்):கணமாய் அருகே உள்ளமடையையும் சேதப்படுத்தி விட்டனர்.மாவட்ட அதிகாரிகளுக்கு பல மனுக்கள் கொடுத்தும் நடவடிக்கை இல்லை.பல தலைமுறையாக வயிற்று பசியை போக்கி வரும் நிலத்தை விற்காததால், எங்களுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர் . பூச்சி : கால்வாய் அடைக்கப்பட்டால் தலித் குடும்பத்தினர் பட்டினி கிடக்க நேரிடும்.மழை காலம் துவங்குவதற்கு முன் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,என்றார் . ராமநாதபுரம் தாசில்தார் ரவிச்சந்திரனிடம் கேட்ட போது,""இது சம்பந்தமாக மனு பெறப்படவில்லை.விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என்றார்.

### 200 கிலோ அபூர்வ களவாய் மீன்

மண்டபம்: ராமேஸ்வரத்திலிருந்து 500க்கும் அதிகமான விசைப்படகுகள் நேற்று முன் தினம் மீன்பிடிக்க சென்று ,நேற்று கரை திரும்பின.ஒரு படகில் 200 கிலோ எடைக்கொண்ட அபூர்வ களவாய் மீன் மாட்டியது.கரை திரும்பிய மீனவர்கள் இதை மீன்கம்பெனியில் விற்றனர். மீனவர்கள் கூறியதாவது: களவாய் மீன் ஆழ்கடல் பகுதியில் அதிகமாக வாழும்.தடைசெய்யப்பட்ட இரட்டைமடி வலையை கொண்டு மீன்பிடி தொழில் செய்யும் போது அதிக எடை கொண்ட இவ்வகை மீன்கள் பிடிபடும், என்றனர்.

### வேர் அழுகல் நோயால் வெங்காய வளர்ச்சி பாதிப்பு

பொங்கலூர் :பொங்கலூர் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள சின்ன வெங்காயம், வேர் அழுகல் நோய் தாக்குதல் காரணமாக, பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.பொங்கலூர், கண்டியன்கோவில், தொங்குட்டிபாளையம், உகாயனூர், வாவிபாளையம், அலகுமலை, அவினாசிபாளையம், பெருந்தொழுவு போன்ற பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் வெங்காயம் வளர்வதற்கு ஏற்ற இதமான சீதோஷ்ண நிலை காணப்படுகிறது. இரண்டு மாதத்தில் விளைந்து நல்ல வருவாயை கொடுப்பதால் சின்ன வெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகளும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.கூலி ஆள் பிரச்னை, மருந்து மற்றும் உரம் விலை உயர்வு, விலை வீழ்ச்சி, நோய் தாக்குதல் போன்ற காரணிகள் விவசாயிகளை பாதிக்கிறது. இதில், நோய் தாக்குதல் மட்டும் கூடுதல் இழப்பை விவசாயிகளுக்கு ஏற்படுத்துகிறது. வேர் அழுகல் நோய், வெங்காய பயிரை தாக்கும் நோய்களில் மிகவும் அபாயகரமானது. வேர் அழுகல் நோய் ஏற்பட்ட பயிர்கள் முற்றாக அழிந்து விவசாயிகளுக்கு பெரிய அளவில் இழப்பை ஏற்படுத்துகிறது.

இந்நோய் தாக்கினால், அடி முதல் நுனி வரை பழுத்து காய்ந்து விடும்.இதை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் அதிகாரிகள் கூறுகையில், "இந்நோய் தாக்கினால் பயிர் மகசூல் கடுமையாக பாதிக்கப்படும். இதை கட்டுப்படுத்த விதை வெங்காயத்தை தேர்வு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்; நல்ல வடிகால் வசதியுள்ள மேட்டுப்பாங்கான நிலங்களில் விளைந்த நோய் தாக்குதல் இல்லாத தரமான வெங்காயத்தை நடவுக்கு பயன்படுத்த வேண்டும். விதை வெங்காயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பூஞ்சாண கிருமிகள், பயிர் முளைத்து வந்த 15 நாட்களில் தாக்க ஆரம்பிக்கும். நடவு செய்வதற்கு முன், பெவிஸ்டின் கரைசலில் நனைத்து, விதை நேர்த்தி செய்தால் இந்நோய் விதை மூலம் பரவுவது தடுக்கப்படும்.நோய் பாதித்த நிலத்தில் பெவிஸ்டின் கரைசலை லிட்டருக்கு இரண்டு கிராம் அளவு கலந்து விசைத்தெளிப்பான் அல்லது கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு அரை கிலோ பெவிஸ்டின் மருந்தை தண்ணீரில் கலந்து நீர் பாய்ச்சியும் கட்டுப்படுத்தலாம். நோய் பாதித்த பயிரை வேருடன் பிடுங்கி எறிந்து விட வேண்டும்; இதன் மூலம் கிருமிகள் நோய் பாதித்த பயிரில் இருந்து மற்ற பயிர்களுக்கு பரவுவது தடுக்கப்படும்,' என்றனர். தற்போது அறுவடை சீசன் முடிந்துள்ளதால், வெங்காய விலை அதிகரித்துள்ளது. விதை வெங்காயம் கிலோ 15 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மார்க்கெட்டில் 18 கிலோ கொண்ட ஒரு சிப்பம் 350 ரூபாய்க்கு விலை போகிறது. கடைகளில் சில்லரை விலையில் 20 ரூபாய் முதல் 22 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**மானிய விலையில் மரக்கன்றுகள்**

தேனி : பெரியகுளம் அரசு தோட்டக்கலைப்பண்ணையில் நெல்லி, மாதுளை, நாவல் போன்ற பல்வேறு வகை மரக்கன்றுகள் மானிய விலையில் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. ஏற்றுமதி தரத்திலான நெல்லியின் என்.ஏ.,7, காஞ்சனா, கிருஷ்ணா, சாக்கியா ஆகிய ரகங்கள் 25 ரூபாய்க்கும், கணேஷ் ரக மாதுளை கன்றுகள் 12 ரூபாய்க்கும், விதையில்லாத நாவல் கன்றுகள் 15 ரூபாய்க்கும்,மற்றும் கறிவேப்பிலை, இலவம், பப்பாளி கன்றுகள் ஐந்து ரூபாய்க்கும், விற்பனை செய்யப்படுகிறது.குறைந்த விலையில் கிடைக்கும் இந்த கன்றுகளை பொதுமக்கள் வாங்கி பயனடையலாம் என தோட்டக்கலை துணை இயக்குனர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**கூடுதல் விலைக்கு பால் விற்னை**

தேனி : ஆவின் பால் பாக் கெட்டில் அச்சிடப்பட் டுள்ள அதிக பட்ச சில்லறை விலைக்கும் அதிகமாக கூடுதல் விற்கப்படுவதாக புகார்கள் வந்தன. இதையடுத்து தேனி தொழிலாளர்

ஆய்வாளர் வாமதேவன் நாயர் தலைமையில் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் கூடுதல் விலைக்கு பால் விற்ற 15 வணிகர்கள் மற்றும் ஏஜென்டுகளுக்கு தலா 500 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது. அச்சிடப்பட் டுள்ள விலைக்கு கூடுதலாக விற்பது சட்டப்படி குற்றம். இது போல் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிலாளர் ஆய்வாளர் எச்சரித்துள்ளார்.

**கோவையில் இன்று விவசாயிகள் பேரணி:திட்டமிட்டபடி நடக்கும் என அறிவிப்பு**

கிருஷ்ணகிரி: "எதிர்கட்சிகள் பந்த் நடத்தினாலும், இன்று 5ம் தேதி திட்டமிட்டபடி கோவையில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடக்கும், ' என்று தமிழக விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் ராமகவுண்டர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:இலவச மின்சாரம் கேட்டு போராட்டம் நடத்தி, கடந்த 1976 ல் துப்பாக்கி சூட்டுக்கு விவசாயிகள் பலியான தினமான ஜூலை 5ம் தேதி விவசாயிகள் சங்கம் சார்பில் ஆண்டுதோறும் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. அதேபோல் நடப்பு ஆண்டும் இன்று 5ம் தேதி உயிர்நீத்த தியாகிகள் நினைவாக தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் கோவையில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில் பெட்ரோல், டீசல், காஸ் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து 5ம் தேதி எதிர்கட்சிகள் தேசிய அளவிலான பந்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. அதேநேரத்தில் இன்று 5ம் தேதி கோவையில் விவசாயிகள் சங்கம் சார்பில் நடக்க உள்ள பேரணி மற்றும் பொதுக்கூட்டம் திட்டமிட்டப்படி நடக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விளைநிலங்களில் யானைகள் "விசிட்'; மாமரங்கள் சேதம் : விவசாயிகள் அதிர்ச்சி**

உடுமலை:உடுமலை அருகே ஒரு வாரத்திற்கும் மேலாக யானைகள் விளைநிலங்களுக்குள் "விசிட்' அடித்து மாமரங்களை சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.உடுமலை அருகே ஜல்லிபட்டி ஊராட்சிக் குட்பட்ட கொங்குரார் குட்டை, தேக்கல்கரடி சுற்று, வெள்ளை பாறை வனப்பகுதிகளுக்கு அருகில் பல நூறு ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்பு மற்றும் தென்னந்தோப்புகள் உள்ளன. வன எல்லையினையொட்டி அமைந் துள்ள இப்பகுதிக்கு வனத்திலிருந்து செல்லும் வனவிலங்குகளான காட்டு யானை, காட்டுப் பன்றிகள் "விசிட்' அடித்து வருகின்றன. தாகம் தீர்க்க திருமூர்த்தி அணைப்பகுதிக்கு செல்லும் காட்டுயானைகள் விளைநிலங்களில், சாகுபடி செய்துள்ள மா, தென்னை உள்ளிட்ட பயிர்களை ருசி பார்த்து வருகின்றன.வனத்துறையினால் அமைக்கப்பட்ட மின்வேலியும் பழுதடைந்ததால், விளைநிலங்களுக்குள் சுதந்திரமாக வனவிலங்குகள் சுற்றித்திரிகின்றன. இதனையடுத்து,

பழுதடைந்த வேலிக்கு பதிலாக விளைநிலங்களையொட்டி, வேலி அமைக்க நடவடிக்கை எடுப்பதாக வனத்துறையினர் உறுதியளித்தனர்.

இதற்கான முதற்கட்ட பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. கொங்குரார் குட்டை, புஜகரட்டுப் பகுதி, வீரமரத்துக் குட்டை, வெள்ளைப்பாறை பகுதிகளில் சுற்றி வரும் யானைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை சேதப்படுத்தி வருவதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:காட்டுயானைகள் அட்டகாசம் கட்டுப் பாட்டிற்குள் இருந்த நிலையில், தற்போது மீண்டும் படையெடுக்கத் துவங்கியுள்ளது அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. வன எல்லையில் அமைக்கப்பட்ட மின்வேலிகளை தரைமட்டமாக்கிவிட்டன. விளைநிலங்களையொட்டி வேலி அமைப்பதும் முதற்கட்ட பணியோடு உள்ளது.இதனால், எவ்வித தடையுமின்றி, இரவு நேரங்களில், தோட்டங்களில் சாகுபடி செய்த மாம்பழம் உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. ஒருவாரமாக தொடர்ந்து இரவு நேரங்களில், 5 யானைகள் குட்டியுடன் கூட்டமாக விளைநிலங்களுக்குள் புகுந்து மாம்பழங்களை சேதப்படுத்தி வருகின்றன.வனத்துறை அதிகாரிகள் வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் புகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**அமராவதியில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்காததால் விவசாயிகள் அதிருப்தி**

உடுமலை:அமராவதி அணையின் நீர் மட்டம் 50 அடியை தாண்டியும் குடிநீர் மற்றும் பாசன தேவைக்கு தண்ணீர் திறக்காததால் விவசாயிகளும், பொதுமக்களும் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழையை அடிப்படையாக கொண்டு அமராவதி அணையிலிருந்து ஜூன் 1ல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப் படும். கடந்தாண்டு வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் அணையின் நீர் மட்டம் வேகமாக சரிந்தது.பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்தப்பட்ட நிலையில் உடுமலை, தாராபுரம், கரூர் பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் கோரிக்கைக்காக மே 21 முதல் 25 வரை, 2,800 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனையடுத்து தற்போது வரை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.இந்நிலையில், கடந்த மாத இறுதியில் நீர் பிடிப்பு பகுதிகளில் துவங்கிய பெய்து வரும் பருவமழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. தொடர்ந்து அதிகரித்த நீர்மட்டம் தற்போது 50 அடியை தாண்டியுள்ளது.நீர்வரத்து அதிகரித்ததும், பாதிக்கப்பட்டுள்ள பாசனப்பகுதிகளுக்காகவும், குடிநீர் தேவைக் காவும் உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகளும், உள்ளாட்சி அமைப்பினரும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை.இதனால், பாசன பகுதி விவசாயிகளும், உள்ளாட்சி அமைப் பினரும் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். அமராவதி கூட்டுறவு சர்க்கரை

ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பில் அரசுக்கு அனுப்பியுள்ள மனுவில், அணையின் நீர் மட்டம் உயர்ந்தும் தண்ணீர் திறக்காததால் பாசன பகுதிகளில் கரும்பு, தென்னை போன்ற பயிர்கள் காயும் அவல நிலை உள்ளது. குடிநீர் மற்றும் கால்நடைகளுக்கு போதுமான தண்ணீர் இல்லாமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கட்டுப்பாட்டு பகுதியில் தண்ணீர் இல்லாததால் மறுதாம்பு பயிர்கள் காய்கிறது. அடுத்தாண்டு அரவைக்கு தேவையான ஆறு ஆயிரம் ஏக்கர் கரும்பு நடவு செய்யவும், பயிர்களை காப்பற்றவும் பிரதான கால்வாயில் உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உடுமலை எம்.எல்.ஏ., சண்முகவேலு வெளியிட்டுள்ள அறிக்கை:திருப்பூர் மாவட்டத்தில் அமராவதி அணையின் எட்டு வாய்க்கால்கள் மூலம் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. குடிநீர் தேவைக்காக அணையில் 20 அடி நீர் மட்டம் இருந்த போது கூட தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது 51 அடி தண்ணீர் கடந்த பல நாட்களாக இருந்தும் அதிகாரிகள் தண்ணீர் திறக்க மறுத்து வருகின்றனர். ஊராட்சி நிர்வாகத்தினர் குடிநீர் தேவைக்காக பல முறை கோரிக்கை விடுத்தும் தண்ணீர் திறக்கவில்லை.ஜூன் 1 ல் திறக்க வேண்டிய பாசனத்திற்கான தண்ணீரும் திறந்து விடப்படவில்லை. புதிய கால்வாய் பகுதியில் பயிர்கள் கருகி வருவதை தடுக்க உயிர் தண்ணீர் வழங்க வேண்டும்.மக்களின் குடிநீர் தேவையையும், பல ஆயிரம் விவசாயிகளின் பாசன தேவையையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தொடர்ந்து புறக்கணித்தால் கட்சி தலைமை உத்தரவின் அடிப்படையில் விரைவில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

***நடப்பு ஆண்டு மே மாதத்தில் தேயிலை உற்பத்தி 1.7 சதவீதம் உயர்வு***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு ஆண்டு மே மாதத்தில், நம் நாட்டில் 7.26 கோடி கிலோ தேயிலை உற்பத்தி ஆகியுள்ளது. இது, சென்ற ஆண்டு மே மாதத்தில் 7.14 கோடி கிலோவாக இருந்தது. ஆக, உற்பத்தி 1.7 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. தேயிலை வாரியம் இந்த புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ளது.

அசாம் மாநிலம்

சென்ற மே மாதத்தில், வட மாநிலங்களில், குறிப்பாக தேயிலை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள அசாமில் உற்பத்தி சரிவடைந்துள்ளது. எனினும் தென் மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததால், ஒட்டுமொத்த அளவில் நாட்டின் தேயிலை உற்பத்தி ஓரளவு அதிகரித்துள்ளது. மே மாதத்தில், வட மாநிலங்கள் 4.74 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்துள்ளன. இது, சென்ற ஆண்டு மே மாதத்தில் 5.03 கோடி கிலோவாக இருந்தது. அசாம் மாநிலத்தில் உற்பத்தி சுமார் 35 லட்சம் கிலோ குறைந்து போனதே இதற்கு முக்கிய காரணமாகும்.
இதே மாதங்களில், தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி 2.10 கோடி கிலோவிலிருந்து 2.52 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரித்துள்ளது.
இந்தியாவில் தேயிலை பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே கென்யா நாட்டிற்கு இணையான அளவில் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. உலகில் தேயிலை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கென்யா அதன் மொத்த தேயிலை உற்பத்தியில் 95 சதவீதத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வேலைவாய்ப்பு

நம் நாட்டில் தேயிலை பருவம் ஜனவரி மாதம் தொடங்குகிறது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. தொழிலாளர்களை அதிகளவில் கொண்டுள்ள துறைகளுள் ஒன்றான இத்துறை 11 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளித்துள்ளது. ஒரு கோடிக்கும் அதிகமானோர் மறைமுக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இத்துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுள் 50 சதவீதத்தினர் பெண்களாவர்.

150 ஆண்டுகள்

சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 31 சதவீதமாக உள்ளது. உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதி ஆகிய அம்சங்களில் 150 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது. உலக அளவில், இந்த மூன்று அம்சங்களிலும் நம் நாடு முன்னிலை வகிக்கும் ஒரே துறை இதுவாகத்தான் இருக்கும் என வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

### கொலக்கம்பை பகுதியில்

# 'பேர்டு ஆப் பாரடைஸ்' கொய் மலருக்கு போதிய விலை இல்லை

## விவசாயிகள் கவலை

கொலக்கம்பை, ஜூலை.5–

கொலக்கம்பை பகுதியில் 'பேர்டு ஆப் பேரடைஸ்' மலருக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### தேயிலை

நீலகிரி மாவட்டத்தில் பணப்பயிராக விளங்கிவந்தது தேயிலை பயிர் தான். இதற்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்தனர்.

இதனால் அரசு அவர்களை மாற்று விவசாயம் செய்ய ஆலோசனை வழங்கியது. இதன்படி நீலகிரி மாவட்ட விவசாயிகள் மலை தோட்ட காய்கறி பயிர் மற்றும் கொய் மலர் சாகுபடி விவசாயமும் செய்ய முடிவு செய்தனர்.

### வெளி நாடுகள்

இந்த நிலையில் கொலக்கம்பை அருகே டெராமியா பகுதியில் கொய் மலர் சாகுபடியில் 'பேர்டு ஆப் பாரடைஸ்' செய்து வருகின்றனர். ஆரம்ப காலத்தில் 'பேர்டு ஆப் பாரடைஸ்' கொய்மலருக்கு வெளி நாடுகளில் அதிக தேவை உள்ளதால் நல்ல விலை கிடைக்கும் என்று கூறப்பட்டது.

இதனை நம்பி நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். ஆனால் தற்போது போதிய மகசூலும் இல்லை. விலையும் இல்லை என விவசாயிகள் பெரும் விரக்தியுடன் கூறுகின்றனர்.

### மாற்று பயிர்

இது குறித்து கொய்மலர் சாகுபடி விவசாயி பொன்னுசாமி கூறியதாவது:–

டெராமியா பகுதியில் ஆரம்பத்தில் தேயிலை விவசாயம் செய்து வந்தோம். பச்சை தேயிலைக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

இதனால் அரசு நீலகிரி மாவட்ட விவசாயிகள் மாற்று பயிர் செய்ய ஆலோசனை வழங்கியது. அதில் ஒன்று கொய் மலர் சாகுபடி. ஒன்று மாற்று பயிர் கொய் மலர் சாகுபடி. இதில் நாங்கள் 'பேர்டு ஆப் பாரடைஸ்' என்று கொய்மலர் விவசாயம் செய் கிறோம்.

### ஏற்றுமதி

இந்த 'பேர்டு ஆப் பாரடைஸ்' மலர்கள் பிப்ரவரி முதல் மார்ச் மாதம் நல்ல மகசூல் அளிக்கும். இந்த காலத்தில் செடியில் 6 முதல் 10 வரை பூக்கள் பூத்து குலுங்கும். இதனை அறுவடை செய்து பெங்களூர் பகுதிக்கு ஏற்றுமதி செய்து வந்தோம்.

அப்போது ஒரு பூவிற்கு ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனையானது. தற்போது இங்குள்ள செடிகளில் போதிய மகசூல் இல்லை. விலையும் ஒரு பூவிற்கு ரூ.2 முதல் ரூ.3 வரை தான் கிடைக்கிறது. போதிய விலை இல்லாததால் செடிகளை பராமரிக்க முடியவில்லை.

### விவசாயம்

பராமரிப்பு இல்லாததால் தற்போது 'பேர்டு ஆப் பாரடைஸ்' மகசூல் குறைவாகவே உள்ளது. முக்கிய காரணம் கடந்த காலங்களில் பெங்களூர் பகுதியில் இந்த வகை மலரை விவசாயம் செய்யாமல் இருந்தனர்.

தற்போது பெங்களூர் பகுதியில் இந்த வகை மலரை விவசாயம் செய்துள்ளதால் நீலகிரி மாவட்டத்தில் விளையும் 'பேர்டு ஆப் பாரடைஸ்' மலருக்கு தேவை குறைந்து உள்ளது.

இதனால் போதிய விலையும் இல்லை. இதற்கு அரசு மானியம் வழங்கி கொய் மலர் விவசாயம் ஊக்குவிக்கவும் வேண்டும். மேலும் இப்பகுதியில் விளையும் கொய்மலர்களை நீலகிரி மாவட்டத்திலேயே ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



கொலக்கம்பை பகுதியில் ஒரு விவசாயி தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கொய் மலர்களை படத்தில் காணலாம்.